**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

OS.NO. 1196/2024 நாள்- 10.04.2026

**வா.சா.1. செல்வம்**

**குறுக்கு விசாரணை பிரதிவாதி தரப்பில்**

நான் வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்து வரவில்லை. நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்று முதல் விசாரணையிலும் வழக்குரையிலும் கூறவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி எனக்கு எவ்வாறு தெரியும் என்று பிராதிலும் நிரூபணவாக்குமூலத்திலும் கூறவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிக்கு எங்கு வைத்து யார் முன்பாக பணம் கொடுத்தேன் என்று பிராதிலும் நிரூபணவாக்குமூலத்திலும் கூறவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1- கடனுறுதிசீட்டு கையால் எழுதப்படவில்லை தட்டச்சு செய்யப்பட்டது. அதை யார் தட்டச்சு செய்தது என்று கேட்டால் பிரதிவாதி தயார் செய்து கொண்டு வந்து கொடுத்தார். வா.சா.ஆ.1- கடனுறுதிசீட்டில் சாட்சிகளின் கையொப்பம் மை வேறுவேறாக உள்ளது என்றால் வெவ்வேறு பேனாவில் எழுதியதால் வித்தியாசம் உள்ளது. எனக்கு எழுதப்படிக்கத் தெரியும். வா.சா.ஆ.1- கடனுறுதிசீட்டில் கையொப்பம் செய்த நபர்கள் எனக்கு தெரிந்த நபர்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.1- கடனுறதிசீட்டில் உள்ள முதல் 2 சாட்சிகளும் எனக்க விரோதமாக சாட்சியம் அளிப்பார்கள் என்பதால் கடனுறுதிசீட்டில் மேற்கொண்டு 2 சாட்சிகளிடம் கையொப்பம் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி மீது இராசபாளையம் தெற்கு காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். தெற்கு காவல் நிலையத்தில் விசாரணையின் போது வா.சா.ஆ.1- கடனுறுதிசீட்டை நான் காண்பித்தேனா என்று கேட்டால் காண்பித்தேன். புகார் மனுவின் நகலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். புகார் மனுவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் தான் நான் என்ன குறிப்பிட்டுள்ளேன் என்று தெரிய வரும் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் விசாரணையின் போது சாட்சி கையொப்பம் செய்த நபர்களை அழைத்து செல்லவில்லை. காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்த போது கடனுறுதிசீட்டு பூர்த்தி செய்யப்படவில்லை என்றும் அதில் சாட்சி கையொப்பம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போன்று பிரதிவாதி பணம் வாங்கவில்லை என்றும் கடனுறுதிசீட்டு எழுதிக் கொடுக்கவில்லை என்றும் அதில்

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

உள்ள கையொப்பம் பிரதிவாதியின் கையொப்பம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1- கடனுறுதிசீட்டில் உள்ள சாட்சிகள் யாரும் கிடையாது என்றும் அதனால் அவர்களது பெயர்களை நான் தெளிவாக குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1- கடனுறுதிசீட்டில் உள்ள சாட்சிகளின் பெயருக்கும், தகப்பனார் பெயருக்கும் சம்பந்தமில்லாமல் இருக்கிறது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1-ல் சாட்சிகளின் பெயர்கள் முரண்பாடாக உள்ளது என்றும் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1- மோசடியான ஆவணம் என்பதால் அதை பொறுத்து எனக்கு எந்தவிதமான பரிகாரமும் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. தாவா வழக்கு பிரதிவாதிக்கு ஆதரவாக செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.